மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் முத்திரைத் தீர்வையை விதிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் விகிதங்களுக்காக தனியே முத்திரைச் சட்டத்தினை இயற்றியுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் மத்திய சட்டமான 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம்தான் பின்பற்றப்படுகிறது. இதன்விளைவாக, பொதுமக்கள் நலன் கருதி மாநில அரசு ஏதாவது மாற்றம் செய்ய விரும்பினால், அதற்கான சட்டமுன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறக்கூடிய சூழ்நிலை நிலவுகிறது. இந்தக் காலதாமதத்தினைத் தவிர்க்கும்வகையில், நமது மாநிலத்திற்கென தனியாக ஒரு முத்திரைச் சட்டம் இயற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் வழிகாட்டி மதிப்பின் உயர்வினால் ஏழை, எளிய மக்கள் பாதிக்காதவண்ணம் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு 5,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) தகவல் தொழில்நுட்பவியல் துறையில் சேவை விளக்கக் கோப்பகம், புதிய கண்காணிப்பு மென்பொருள் மற்றும் பாதுகாப்புத் தணிக்கை வசதிகள் அளிப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில் நுட்பவியலில் இந்தியாவில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்வதற்கு, 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கொள்கைதான் அடிப்படைக் காரணமாக விளங்குகிறது.

அரசுத் துறைகள் பல்வேறு சேவைகளை மக்களுக்கு இணையம்மூலம் வழங்கி வருகின்றன. இந்த இணைய சேவைகள் அனைத்தும் தற்போது அந்தந்தத் துறைகளின் வலைத் தளங்களின்மூலம் அளிக்கப்படுகின்றன. பல்வேறு சேவைகளுக்கான இணையதள முகவரிகளை பொதுமக்கள் நினைவில் வைத்துக்கொள்வது கடினமானது ஆகும். இதனைத் தீர்க்கும் வகையில், அரசின் அனைத்து சேவைகள் பற்றிய விவரங்கள்

அடங்கிய சேவை விளக்கக் கோப்பகம், அதாவது, Online Demonstrative Services Directory ஒன்று தமிழக அரசின் இணையதளத்தில் வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சேவை விளக்கக் கோப்பகத்தில் இணையதள சேவை, அதாவது Online Service, இணையதள முகவரி, அதாவது Website Address, சேவை தொடர்பான இணைப்புகள், அதாவது Links to the services, உபயோகிப்போர் விளக்க வழிகாட்டி, அதாவது Demonstrative User Guide மற்றும் சேவையின் நிலை, அதாவது Service Status குறித்த தகவல் போன்ற விவரங்கள் இடம்பெறும். இதன்மூலம் பொதுமக்கள் அரசின் சேவைகளைப்பெற அரசு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய தேவை பெருமளவில் குறையும்.

முற்பகல் 11-15

இதுபோன்று, அரசின் திட்டங்கள் மக்களை விரைவில் சென்றடைய, திட்டங்களின் செயல்பாட்டினை காலமுறை அடிப்படையில் கண்காணித்து ஆய்வு செய்வது அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டு, ஒரு புதிய கண்காணிப்பு மென்பொருள், அதாவது Scheme Monitoring Application Software உருவாக்கப்படும். இதன்மூலம், திட்டங்களின் செயல்பாடுகளை அதிகாரிகள் எந்நேரமும் இணையம் மூலமாகக் கண்காணிக்கவும், அதனடிப்படையில் தக்க முடிவுகளை மேற்கொள்ளவும் இயலும்.

அரசின் செயல்பாடுகள் இணைய பொது தளங்களில் அளிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உள்ள அரசு இணைய தளங்கள் மற்றும் மென்பொருட்களில் ஏதேனும் பாதுகாப்பு குறைபாடு இருப்பின் அதனைப் பயன்படுத்தி இணைய வழி ஊடுருவிகள், அதாவது Hackers, இணைய தளங்களை உருக்குலைத்து முக்கியமான தகவல்களைக் களவாடிச் செல்ல வாய்ப்பு உள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த அரசு தகவல் தொழில்நுட்ப கட்டமைப்புகளில் இத்தகைய இடையூறு ஏற்படும்போது, பொதுமக்களுக்கும் அரசு அளித்துவரும் சேவைகளுக்கும் பெருமளவில் பாதிப்பு ஏற்படும்.

இத்தகைய தாக்குதல்கள் மற்றும் பாதிப்புகளிலிருந்து தற்காத்துக்கொள்ளும்வண்ணம் அரசுத் துறைகளின் இணைய தளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மென்பொருட்களை சம்பந்தப்பட்ட துறைகள் படிப்படியாக பாதுகாப்புத் தணிக்கை

மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) வன வளம் பாதுகாத்தல், உயிரியல் பூங்கா அமைத்தல், வனச் சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் ஏற்படுத்துதல், தேக்கு மரத் தோட்டங்கள் நடவுதல், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்தை வளர்த்து, இயற்கையைக் காத்து, மாசற்ற நிலையை உருவாக்கி, வளரும் தலைமுறையைக் காக்கும் வகையில், தமிழகத்தின் பசுமைப் போர்வையை அதிகரித்திட வனங்களுக்கு வெளியேயும் மரங்களை நட்டு பராமரிக்கும் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.*

தமிழ்நாட்டில் இயற்கையாக வளரும் தேக்கு மரங்களும், தேக்கு மரத் தோட்டங்களும் சத்தியமங்கலம், சேலம், தேனி மற்றும் நீலகிரி போன்ற மலைப் பகுதிகளில் காணப்படுகின்றன. தற்போது காப்புக் காடுகளிலும், சரணாலயங்களிலும் தேக்கு மரங்களை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதால், காவிரி ஆற்றுப் படுகை நிலங்களில் தேக்கு மரங்களை வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனது முந்தைய ஆட்சிக்காலத்தில், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு, சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில், 2003-2004 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளில் 16,050 எக்டேர் பரப்பில் படுகை நிலங்களில் 21 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் தேக்கு மரத் தோட்டங்கள் ஏற்படுத்தும் திட்டம் துவக்கப்பட்டது.

இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து மக்களின் தேக்கு மரத் தேவையைக் கருத்தில்கொண்டும், அரசுக்கு வருவாயை ஈட்டும் வகையிலும், 19,075 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்கள் நடவு செய்யப்படும். இதற்கென 39 கோடியே 49 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ள தேக்கு மரங்களைப் பராமரிப்பதற்கென இந்த ஆண்டு 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.